தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ரவி குமார் தியோடர், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (விரிவாக்கம்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30-8-2012

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**செப்டம்பர் 2012 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்**

செப்டம்பர் மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து இப்பல்கலைக்கழக பயிர்ப்பாதுகாப்பு மையத்தின் அறிக்கை பின்வருமாறு:

**நெற்பயிர்**

மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருவாரூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நெற்பயிரில் இலை் சுருட்டுப் புழு மற்றும் தண்டுப் புழுவின் தாக்குதல் பரவலாகக் காணப்படுகின்றன. இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வயல்களில் விளக்குப் பொறி அமைத்து (1 / ஏக்கர்) அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும்.

இப்பூச்சிகளின் தாக்குதல் அதிகமாய் தென்பட்டால் வேப்பங் கொட்டைச்சாறு 5 விழுக்காடு அல்லது பாசலோன் 35 இசி 1500 மிலி / எக்டர் அல்லது பாஸ்போமிடான் 40 எஸ்எல் 600 மிலி / எக்டர் அல்லது ப்ரோபினோபாஸ் 50 இசி 1000 மில்லி / எக்டருக்குத் தெளிக்கவும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் நெற் பயிரில் இலைப்பேன் தாக்குதல் நாற்றங்காலில் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த பாஸ்போமிடான் 40 எஸ்எல் 50 மிலி நாற்றங்காலில் தெளிக்கவும் (1 ஏக்கர் வயல்).

**பருத்தி**

திருநெல்வேலி மாவட்டத்தில் பருத்தியில் காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சிப் பொறிகளை ஏக்கருக்கு ஐந்து வீதம் வைத்து தாய்

ஆண் அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும். அதிகம் சேதம் உள்ள பயிர்களில் (1000 லிட்டர் தண்ணீர் / எக்டருக்கு) கீழ்க்காணும் பூச்சிக்கொல்லிகளான பாசலோன் 35 இசி 2.5 லிட்டர் அல்லது குனைல்ஃபாஸ் 25 இசி 2 லிட்டர் அல்லது கார்பரில் 50 நனையும் தூள் 2.5 கிலோ அல்லது குளோர்பைரிஃபாஸ் 20 இசி 2 லிட்டர் இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும்.

## நிலக்கடலை

திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிலக்கடலையில் இலைச்சுருட்டு புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஒரு விளக்குப் பொறி வைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும். தேவைப்படின் கீழ்காணும் பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றைப் பயிர்களில் தெளிக்கவும். டைகுளோர்வாஸ் 76 டபுள்யுஎஸ்சி 625 மில்லி / எக்டர் அல்லது மானோகுரோட்டோபாஸ் 36 டபுள்யுஎஸ்சி 750 மில்லி / எக்டர் அல்லது குளோர் பைரிஃபாஸ் 20 இசி 1250 மில்லி / எக்டர் அல்லது பாசலோன் 35 இசி 750 மில்லி / எக்டர்.

## மாவூப் பூச்சி

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிர்களில் உள்ள மாவுப் பூச்சியின் தாக்குதலை ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்தலாம். இதற்காக அருகில் உள்ள வேளாண் பல்கலைக்கழக கல்லூரி, வேளாண் ஆராய்ச்சி நிலையம் அல்லது வேளாண் அறிவியல் மையத்தினை அணுகி ஒட்டுண்ணிகளை இலவசமாகப் பெற்று மாவுப் பூச்சி தாக்குதலை கட்டுபடுத்தலாம்.

மேலும், விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611214

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611226

மக்கள் தொடர்பு அலுவலர்